RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2225

# குறிஞ்சிநில மக்களின் இறைவழிபாடும் நம்பிக்கையும்

**ந. பிரபாவதி [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி (நிலை-1), விருத்தாசலம்-606001, தமிழ்நாடு, இந்தியா

# The Worship and Faith of the people of Kurinji Land

**N. Prabavathi [a, *]**

[a] Department of Tamil, Thiru Kolanjiappar Government Arts College (Grade-I), Vriddhachalam-606001, Tamil Nadu, India

* Corresponding Author: prabavathinallathambi@gmail.com

Received: 01.09.2022
Revised: 03-11-2022
Accepted: 09-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The Tamil people had some very different customs because of their place of residence and for other reasons. What occupies an indispensable place in them is faith and the worship associated with it. Rather than saying that all this arose at the time of man's birth, it is the experiences of life that give rise to man's faith and worship. When beliefs have persisted for ages, they form a tradition. When all these traditions come together, it forms the ground in the name of culture. During the Sangam age, religious development was only significant. Religion was a way of life, but it did not grow into an institution and dominate society. The wisemen thought of this world, the hereafter, existing life, rebirth, heaven, hell, impermanence, salvation, and the fruits of action. On that day, Gods like Shiva, Thirumal, Murugan, Balaraman, Kotravai, and Thirumagal were introduced. People understood that they were gods, worshipped them with love, and lived. Thus, this article summarizes the worship of the people of Kurinji and their beliefs.

**Keywords:** Sangam Literature, Kurinji Land, Religion, God, Life

## முன்னுரை

மக்களை அச்சுறுத்தும் அணங்குகளும், தெய்வங்களும் மலைகளிலும், மலைச்சுனைகளிலும் வாழ்வதாக பண்டைய மக்கள் கருதினர். இந்நம்பிக்கை காலம்காலமாக நம் மக்களிடம் பண்பாட்டின் வழி பரவி வந்த நம்பிக்கை எனலாம். மலையில் மழை பொழிவதற்காகவும். மலைத்தெய்வங்களின் வீறு தணிதல் வேண்டும் என்பதற்காகவும் பழந்தமிழர் பலிக்கொடுத்துத் தெய்வங்களை வணங்கியுள்ளனர். அவ்வகையில் குறிஞ்சி நிலமானது மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும். அந்நில தெய்வம் முருகனே. முருகனை வழிபடும் மக்கள் வீரத்தன்மை குன்றாதவகையில் வழிபாடு செய்தனர். முருகனை அழகன்இ இளையன மணம் கொண்டவன் தெய்வத்தன்மை பொருந்தியவன் என்றும், இளம் பெண்களுக்குக் காதல் நோய் தருபவனாகவும் இருக்கிறான் என்றும் கூறுவர். மலரினும் மெல்லிய காதலைக் கொண்ட மயக்கத்தைப் போக்க முருகன் சார்பில் வேலன் வெறியாட்டு அயர்வது இயல்பாக நடக்கக்கூடிய ஒரு நிகழ்வாகும். அவ்வகையில் குறிஞ்சி நில மக்களின் இறைவழிபாட்டையும் நம்பிக்கையும் என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழிபாடு

'வழிபாடு' என்ற சொல்லானது 'வழிபடுதல்' என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றியது. அச்சொல் பின்பற்றுதல், வணக்கம், வழிபாட்டின் தோற்றம் எப்படி இருந்திருக்கும் என்பதற்கும் கைலாசபதி, "பண்டைய தமிழில் வாழ்க்கையும், வழிபாடும் என்ற தம் நூலில் தருக்க ரீதியான முடிவாக வழிபாடு தோன்றலாயிற்று என்று கூறியுள்ளார்" (Kailaasapadhi, 2010). தெய்வ வழிபாடு தோன்றுவதற்கு முதற்காரணமாய் அமைவது மனித வாழ்வில் அமையும் துன்பமே காரணமாக தோன்றுகிறது.

## இறைவழிபாட்டின் நோக்கமும் வளர்ச்சியும்

ஆரம்பக் காலக்கட்டத்தில் தனி மனிதனின் நோய்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் கொடுப்பதாக வேண்டி நோய் தீர்ந்த பிறகு கொடுக்க வேண்டிய நேர்த்திக்கடனை நிறைவேற்றி அமைதிப்படுத்த தெய்வங்களுக்கு வழிபாடுகள் நடத்தப்பட்டன. ஊருக்கு நல்லது நடக்க வேண்டும் என்றும் விளைச்சல் பெருக வேண்டும் என்றும், நல்ல மழை பெய்ய வேண்டும் என்ற பொது நோக்கங்களுக்காக வழிபாடுகள் படிப்படியாக தோன்றி இன்று பல்கிப் பெருகிவிட்டன. தங்களுடைய மகிழ்ச்சியினையும், கொண்டாட்டங்களையும் தெரியப்படுத்தும் நோக்கில் பெரிய அளவில் திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன.

தன்னை விட ஆற்றல் வாய்ந்த சக்திகளாகிய நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய பஞ்ச பூதங்களை தெய்வமாக கருதி ஆரம்பகால மனிதன் வழிபாடு மேற்கொண்டான். இயற்கையின் பேரதிசியங்களை கண்டு ஆதிகாலமனிதன் வியந்து வழிபட ஆரம்பித்தான். இன்று படிப்படியாக வளர்ந்து காலையில் கதிரவனை வணங்குதல், (சூரிய நமஸ்காரம்) தமிழ் மக்களின் உழவர் திருநாளாகக் கொண்டாடப்படும் தைப்பொங்கல் விழாவாக கதிரவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாட்டு விழாவாக இன்றும் நம்மிடம் காணப்படக்கூடியதாக உள்ளது.

## குறிஞ்சி நிலமும் மக்களும்

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி ஆகும். இங்கு வாழும் மக்களைக் கானவர், குறவர் என வழங்குவர். இவர்கள் மலையின் பக்கத்தேயுள்ள சிறிய ஊர்களில் வாழ்வர். அவர்களின் வீடு குரம்பை எனவும் அழைக்கப்பட்டது. குறவர்களின் குடிசை மேல் காட்டுப்புல், வரகினது வைக்கோல் ஆகியவற்றால் வேய்ப்பட்டிருக்கும். அந்நில மக்கள் தேன் எடுத்தல், தினைப்பயிரிடுதல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களையும் செய்தனர். குறிஞ்சிநில மக்களிடத்தே வெறியாட்டு என்னும் வெறிக்கூத்து மிகப்பெரிதும் பரவியிருந்தது. தெய்வம் மக்கள் மீது வந்து ஆடுவதை வெறியாட்டு என்று வழங்குவர். சங்க இலக்கியங்களில் முருகவழிபாடு கூறப்படும் இடங்களிலெல்லாம் வெறியாட்டு எனப்படும் இத்தகைய கூத்துகள் வருணிக்கப்பட்டுள்ளன. வழிபடுவோர் தம்மிலே தெய்வம் வந்து வெளிப்படும் என்னும் நம்பிக்கையுடன் கூத்தாடினர். இவ்வழக்கமானது இன்றும் கிராமபுறங்களில் பரவலாக காணப்படக்கூடிய ஒன்றாக திகழ்கிறது. அவர்களின் வழிபாட்டுமுறைகளையும், நம்பிக்கைகளையும் பின்வருமாறு காணலாம்.

## இறைக்கொள்கை

எருக்கம் பூ குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலையையும் உடையது. நறுமணம் இல்லாதது. எவராலும் விரும்பிச் சூடப்பெறாதது, எனினும் நம்மிடம் இருக்கும் எருக்கம் பூவையும் அன்போடு இட்டால் கடவுள் எருக்கம் பூவையும் மறுக்காமல் ஏற்றுக்கொள்வார். இவ்விழுமிய கருத்தினை,

"நல்லவும் தீயவும் அல்ல குவிஇணர்ப்

புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை

கடவுள் பேணேம் என்னா"

எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிடுகிறார் கபிலர்.

கடவுளுக்கு எதைப் படைக்கிறோம் என்பது முக்கியம் அன்று. நாம் உள்ளன்போடு படைக்கிறோமா என்பது தான் முக்கியம். நெஞ்சகமே கோயில்: நினைவே சுகந்தம்: அன்பே மஞ்சன நீர்: பூசை கொள்வாராய் பராபரமே எனும் தாயுமானவரின் வாக்கும், அன்பொடு உருகி அகம் குழைவார்கன்றி, என்பொன் மணியினை எய்த ஒண்ணாதே என்னும் திருமூலரின் கருத்தும் இங்கு நினைவு கூறதக்கனவாக உள்ளன.

பஞ்சாலே திரிந்த வெள்ளிய திரியையுடைய விளக்கினைக் குறவர் தம் வீடுகளில் ஏற்றுவர் என்பதை,

"நிரைஇதழ் பொருந்தாக கண்ணோடு இரவில்

பஞ்சி வெண்திரிச் செஞ்சுடர் நல்இல்"

இப்பாடல் அடிகளால் அறியலாம்.

## வெறியாட்டு

புறத்திணையியலில் நிரைமீட்டலின் (கரந்தையின்) ஒரு துறையாக வெறியாட்டை மேற்கொள்ளும் காந்தள்(வெறியாட்டிற்கு வழங்கும் வேறுபெயர்) குறிப்பிடப்பட்டுள்ளது.

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட் டயர்ந்த காந்தளும்"

வெற்றி வேண்டி நிகழ்த்தப்பெறும் இந்த வெறியாட்டிற்கு மறுதலையாக அகத்திணையில் நிகழ்த்தப்பெறும் வெறியாட்டு காதலை மையப்படுத்தியதாக நிகழ்த்தப்பெற்றுள்ளது (Ilampuranar, 2000).

## வெறியாட்டு நிகழும் சூழல்

களவொழுக்கத்தின் போது பல காரணங்களால் தலைவியின் மேனி மெலியும், தளர்ச்சி காணும் அம்மாற்றங்களைக் கண்டு கட்டுவிச்சியைக் கொண்டு குறிகேட்பர். அல்லது வேலன் எனப்படும் முருகப்பெருமானின் பூசாரியைக் கொண்டு வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்வர். குறிஞ்சி நில மக்களிடம் வெறியாட்டு என்னும் கூத்து பரவலாக காணப்படக்கூடிய ஒன்றாக இருந்தது. தெய்வம் மக்கள் மீது வந்து ஆடுவதை வெறியாட்டு என்றும் முருகனுக்கு இயல்பான நறுமணத்தை வெறி என்றும் கூறுவார். வெறியாட்டில் வழிபடுவோர் தெய்வம் தன் மீது வந்து வெளிப்படும் என்னும் நம்பிக்கையில் கூத்தாடினர். பழந்தமிழரிடையே முருக வழிபாடு வெறியாட்டுச் சடங்காக இருந்தமையைத் தொகை நூல்களில் பயின்றுவரும் முருகவழிபாடு பற்றிய குறிப்புகள் வழி உணர முடிகின்றது. இவ்வெறியாடல் வெறி என்றும் வெறியாடல் என்றும் வேலனாதல் என்றும் சுட்டப்படுகின்றது.

வெறியாட்டுப் பற்றி கபிலர் ஐந்துப் பாடல்களைப் பாடியுள்ளார். அகநானூற்றில் ஒரு பாடலும் (தலைவிகூற்று 292), ஐங்குறுநூற்றில் உள்ள வெறிப்பத்தில் நான்கு பாடல்களை தோழிக்கூற்றாக (243,244,240,249) பாடியுள்ளார். அப்பாடல்கள் அனைத்தும் விளித்தல், தலைவி கலக்கம், வெறியாட ஏற்பாடு செய்தல், தாயின் செயல் வேலன் வாழ்த்தல், வேலன் தலைவியின் மாற்றம் கூறல் ஆகிய முறைகளில் அமைந்துள்ளது (Venkatasami Nattar, 2001).

முருகனை வழிபடும் இடங்களிளெல்லாம் வெறியாட்டு நடைபெறுவது மரபுவழிப்பட்ட ஒரு நிகழ்வாகவே கருதப்படுகிறது. தெய்வங்களை அழைக்க வெறியாட்டு நிகழ்த்தும் கட்டுவிச்சியை

அழைத்து நல்ல நெடிய குன்றத்தைப் பாடும் பாட்டையே பாட வேண்டும் என்ற உயரிய கொள்கை இருந்துள்ளது.

“அகவன் மகளே அகவன் மகளே

அகவன் மகளே பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே அவர்.

நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே”

என்னும் பாடல் தெய்வங்களையும் குலத்தோரையும் அழைத்துப் பாடுவதை மரபாகக் கொண்டவள் கட்டுவிச்சியாகிய அகவல் மகள் என்பதையும் புலப்படுத்துகின்றது.

வயலில் முதல் போகமாக விளைந்திருந்த தினைக் கதிரினைத் தெய்வத்திற்குப் படையலிட்டிருந்தபோது. அதனை அறியாது எடுத்து உண்டு மயில் மகிழ்ச்சியுடன் ஆடிய ஆட்டத்தை வெறியாட்டு நிகழ்த்திய கட்டுவிச்சியின் ஆட்டம் போன்று அமைந்ததாக மக்கள் எண்ணிய எண்ணத்தைக் காணுமிடத்து அது முருகனை வழிபடுவதற்குப் படையலிட்டு வெறியாட்டுச் செய்த பழக்கத்தையே சுட்டுவதாக உள்ளது.

## வேலனின் வெறியாட்டு நிகழுமிடம்

முருகனை வழிபடும் நோக்கில் வேலன் புனையும் வெறியாட்டு நிகழுமிடம் அழகுறப் பேசப்பட்டுள்ளது. பழைய மணலை அகற்றிப் புதுமணலைப் பெய்து அழகு படுத்திய வீட்டின் முன்பு செந்நெல்லும் வெண்பொறியும் சிதறிக் கிடக்க மணங்கமழ் மலர்கள் யாவும் பரப்பி வைக்கப்பட்டிருக்கும். வெறியாட்டுக் களத்தில் வேலன் வெள்ளிய பனந்தோட்டினைக் கடம்ப மலரோடு சூடி கழற்காயை உடம்பில் அணிந்துகொண்டு முருகக் கடவுளின் பெரும் புகழினைத் துதித்து படிமக் கலத்தைக் கையில் தூக்கிக்கொண்டு முருகன் தன் குறையைக் களைய வேண்டுமென்று வேண்டியதை,

“பொய்யா மரபின் ஊர்முது வேலன்

மெய்ப் படுத்து கன்னம் தூக்கி

முருகு என மொழியும்”

இப்பாடலடிகளால் அறியமுடிகிறது.

வெறியாட்டு எடுக்குங்கால் தலைவியின் நோயினைப் போக்க ஒரு படிமம் செய்து கழற்சிக்காய் இரண்டினை இரண்டு கண்களாய்ப் பதித்து வேலனிடம் கொடுக்க அவன் அதனைத் தூக்கிக்கொண்டு வெறியாடியதை அறியமுடிகின்றது. தலைவி தலைவனுக்காக ஏங்குகிறாள் அவள் உடல் மெலிவதால் அவளுடைய வேறுபாட்டிற்குக் காரணம் கண்டுகொள்ளத் தலைவியின் தாய் கட்டு பார்ப்பதற்கோ அல்லது கழங்கு பார்ப்பதற்கோ ஏற்பாடு செய்கிறாள் என்பதை,

“அன்னை தந்தது ஆகுவது அறிவென

பொன்நகர் வரைப்பில் கன்னம் தூக்கி

முருகென மொழியு மாயி

அருவரை நாடன் பெயர்கொலோ அதுவே”

இப்பாடலடிகளால் அறியமுடிகிறது (Duraisami Pillai, 2001).

## திருமுருகாற்றுப்படையில் வெறியயர் களம்

கோழி கொடியுடன் திருமுருகனை களத்திற்கு எழுந்தருள் வித்து, நெய்யுடன் வெண்சிறு கடுகையும் மெய்யில் அப்பிக் கொண்டு, வழிபடுநம்பிக்கையும் வழிபடும் மந்திரத்தை உச்சரித்தபடி,

சிவந்த நூலைக் கையிலே காப்பாக்க கட்டிக்கொண்டு வெண்பொரிறையைத் தூவி, ஆட்டின் குருதியுடன் பிசைந்து வெண்மையான அரிசியை சிறுபலியாக இட்டு, மஞ்சள் நீருடன் நறுமணஞ்சான்ற சந்தனம் முதலியவற்றை, தெளித்து, செவ்வலரி முதலிய பூக்களை மாலையாகச் தொங்கவிட்டு, ஊரெங்கும் பசியும் பிணியும் நீங்குக என்று வாழ்த்தி, நறும்புகையூட்டி, குறிஞ்சிப்பண் இசைத்து வழிபடுவர் என்ற செய்தி, குறமகள் வெறியயர்ந்தாள் என்பதை திருமுருகாற்றுப்படை பாடல் வரிகள் (228-248) மூலம் அறியலாம்.

## மதுரைக்காஞ்சி-வெறியயர் களம்

"அருங்கடி வேலன் முரகொடு வளைஇ

ஆரிக்கூட் டின்னியங் கறங்கநோர் நிறுத்த

சீர்மிகு நெடுவேள் பேணித் தரூஉப் பிணையூஉ

மன்றுதொறு நின்ற குரவை"

தலைவியின் உடல் மெலிவிற்கு முருகனே காரணம் என்று கருதி இனிய ஓசை எழுப்பும் வாத்தியங்களை வாசித்து, கார்கால மலராகிய குறிஞ்சிப்பூவை சூடி, கடப்ப மாலையணிந்த முருகனை தன் கண்முன்னே நிறுவிக்கொண்டு மகளிர் ஒருவருக்கொருவர் கைகளை பிணைத்துக்கொண்டு குரவைக்கூத்து ஆடிய செய்தியை மதுரைக்காஞ்சி பகர்கின்றது.

இவ்வெறியாட்டில் ஆட்டின் கழுத்தை அறுத்து தினையையுடைய பிரப்பை வைத்து வழிபடுவதை,

"மறிக் குரலறுத்துத் தினைப்பிரப் பிரீஇ"

என்ற அடிகளால் அறியலாம்.

பலவாகிய வேறுபட்ட நிறம் பொருந்திய சோற்றையுடைய பலியுடன் சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று நோயுள்ள பெண்ணின் அழகிய நெற்றியைத் தடவி முருகக் கடவுளை வணங்கி பலியாகக் கொடுப்பான் என்பதை,

பல்வே றுருவிற சில்லவிழ் மடையொடு

சிறுமறி கொன்றிவ ணறுநுதனீவி

வணங்கினை கொடுத்தியாயின்"

என குறுந்தொகை பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன (Duraisami Pillai, 2001).

வெறியாடும் களத்தினை நன்கு அமைத்து, வேலிற் மாலை சூட்டி வளம் பொருந்திய கோயிலில் ஒலி உண்டாகப் பலி கொடுத்து, அழகிய சிவந்த தினையை குருதியுடன் கலந்து முருகனை அச்சம் பொருந்திய இரவில் வேலன் வரவழைப்பான் என்பதை அறியமுடிகிறது.

முருகனால் வருத்தமுற்ற மகளிர்க்கு ஆடு அறுத்தாடும் களத்தில் குருதிப்பாய்ந்திருப்பது. பறவைகளையும் விலங்குகளையும் வேட்டையாடி மத்தகம் அழிய அம்புபட்டு உருவின புண்களிலிருந்து குருதிப்பாய்தலுக்கு உவமையாகக் கூறப்படும்.

"புண்ணுமிழ் குருதி முகம்பாய்த் திழிதரப்

புள்ளி வரிநுதல் சிதைய

அணங்குறு மகளிராடுகளங் கடுப்ப"

எனக் குறிஞ்சிப்பாட்டு கூறுகின்றது (Duraisami Pillai, 2001). வெறியாட்டம் மேற்கொண்ட மகளிரின் தோற்றப்பொலிவு முதலியனவற்றை குறுந்தொகை செய்யுட்களும், அகநானூற்று செய்யுட்களும் குறிக்கின்றன. அகநானூற்றில் வெறியாட்டு பற்றியச் செய்தியை சிறப்பாக பாடிய காரணத்தினால்

வெறிபாடி காமக்கண்ணியார் என்ற பெயர் அவருக்கு பொருத்தமானதாக அமைந்துள்ளதை நம்மால் அறியமுடிகிறது. பட்டினப்பாலையிலும் இவர்களைப் பற்றிய குறிப்பு உண்டு. இம்மகளிர் வெறியாடுகின்ற அழகு, தெய்வத்திற்கு பலியாக இட்ட செழுமையான கதிரைத் தெரியாமல் உண்ட மயில் வெம்மையுற்று நடுங்குவதற்கு ஒப்பிடப்படுகின்றது.

முருகனால் நோய் வந்ததென்று வேலன் கூறித் தான் கூறிய சொற்களால் கேட்டாரை வளைத்துக் கொண்டு வாத்தியங்கள் முழங்க குறிஞ்சிமலர் சூடி கடம்பு சூடிய முருகனைத் தன் மெய்க்கண்ணே நிறுத்தி வழிபட்டான் என்று தொகை நூல்கள் கூறியுள்ளன. வேலன் என்னும் சொல் முருகனுக்கு வழிபாடியற்றுவோனைக் குறித்து நின்றது. காதலனோடு கலந்த தலைவியின் வேறுபாடு கண்ட அன்னை வேலனை அழைத்து வெறியாட்டு எடுப்பாள். வெறியுடன் ஆடும் வேலனின் மேனியில் முருகன் நிற்பதாகக் கருதிய சங்ககால மக்களின் நம்பிக்கையை உணரமுடிகிறது. இதைத் தலைவன் அறிந்து திருமணம் செய்ய விரைவில் வருவான் என்பதை குறிபார்த்தல் மூலமாகவும் அறியமுடிகிறது. கடவுள் தொடர்புடைய சிந்தனைகள் சங்க இலக்கியங்களில் அதிகமான அளவுக்கு காணப்படுகின்றன. நிலத்திற்கு ஏற்றவாறு கடவுளைப் பிரித்துக்கொண்டு வழிபடும் முறை வழக்கில் இருந்திருக்கிறது. அவ்வகையில் குறிஞ்சிநில மக்களிடம் மிகச்சிறந்த வழிபாடாக வெறியாட்டு திகழ்ந்துள்ளது.

## நம்பிக்கை

கானவன் ஒருவன் வேட்டைக்குப்போகும் போது வழியில் ஒரு ஆமா என்ற காட்டுப்பசு வந்தது. வேடன் அக்காட்டுப் பசுவின் நெஞ்சினில் அம்பினை எய்தான். அந்த அம்பு குறி தவறி போய்விட்டது. இதற்கு மலையுறை தெய்வமே காரணம் என்று அக்கானவன் நம்பினான். தன் சுற்றத்தார் அனைவரையும் மலையுறைத் தெய்வத்திடம் அழைத்துச் சென்று பலிகொடுத்து வணங்கினான் என்பதை,

"மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்

அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே"

கலித்தொகை பாடலடிகள் விளக்குகின்றன.

பொது மன்றத்தில் நின்ற மரத்தில் முருகக் கடவுள் உறைந்ததாகவும் அக்கடவுள் கொடியவரைத் தண்டித்ததாகவும் அங்கு வாழும் மக்கள் நம்பினர் என்பதை

"எம்மூர் வாயில் ஒண்டுறைத் தடைஇ

கடவுள் முதுமரத்து"

"மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள

கொடியோர்த் தெறூம் என்ப யாவதும்

கொடியர் அல்லரெங் குன்றுகெழு நாடா"

என்ற குறுந்தொகைப் பாடலடிகளால் அறியமுடிகிறது.

"அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது

பணைத்த பகழிப் போக்கு நினைந்து கானவன்

அணங்கொடு நின்றது மலைவாள் கொள்கென

கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டெழுத்த

கிளையொடு மகிழும் குன்றநாடன்"

என்ற நற்றிணை பாடலடிகளாலும் அறியமுடிகிறது.

## மக்கட்பேறு

கடவுளைப் பேணி வேண்டினால் மக்கட்பேறு வாய்க்கப்பெறும் என்ற நம்பிக்கையும் வழிவழியாக இருந்துவருவதை,

"குன்றக் குறவன் கடவுட் பேணி

இரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமகள்"

என்ற ஐங்குறுநூற்றுக் குறிஞ்சிப்பாடலால் அறியலாகிறது (Duraisami Pillai, 2002).

இந்நம்பிக்கை பண்டைய காலம் தொட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ள ஒரு சிறப்புவழிபாடாக கருதப்படுகிறது. சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும்| என்பது முதுமொழி. அதாவது சஷ்டியில் குறிஞ்சிநில முருகனுக்கு நோன்பு இருந்தால் இறைவன் அகப்பையில் குழந்தை வரம் அளிப்பான் என்ற நம்பிக்கையை பறைசாற்றும் விதமாக முதுமொழி அமைந்துள்ளது.

கற்சுனைகளைத் தெய்வங்கள் காத்து வருவதாகவும், சுனைகளிலுள்ள குவளை| மலர் காந்தள்| மலர்களைக் கொய்யக் கூடாது என்றும் பண்டைத் தமிழர்கள் வழிவழியாக நம்பினார்கள். அம்மலைப்பகுதியில் வாழும் சூரர மகளிர் அம்மலர்களை பறித்து சூடிக்கொள்வார்கள் என்றும் மலையருவியினை இசைக்கருவிகளாக கொண்டு ஆடுவார்கள் என்பதையும்,

"கடவுள் கற்சுனை அடையிறந் தவிழ்ந்த

புறியாக் குவளை மலரொடு காந்தள்

குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப

பெருவரை யடுக்கம் பொறப்பச் சூர்மகள்

அருவி யின்னியத் தாடு நாடன்"

இப்பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

குரங்கு தொட்டு வழுக்கி வீழ்ந்த மணம் மிகுந்த பலாக்கனியை மலையருவி ஊரார் நீருண்ணும் துறையில் கொண்டு வந்து சேர்த்தது போன்று, தலைவியைத் தலைவனுடன் கூட்டுவித்தது என்பது குறுந் 90 வது பாடலில் தெய்வத்தால் கூட்டுவிக்கப்பட்ட காதல் உறவு உலகமே நிலை பிறழ்ந்தாலும் மாறாது என்று பழந்தமிழர் உறுதியாக நம்பினர். இதுவும் பண்பாடு வழிவந்த நம்பிக்கையாகும்.

"நிலம்புடை பெயரினும் நீர்திப் பிறழினும்

இலங்குதிரைப பெருங்கடற் கெல்லை தோன்றினும்

வெவ்வாய் பெண்டிர் கவ்வை அஞ்சிக்

கேடெவன் உடைத்தோ"

## பல்லி சொல்லில் பலன்

"பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்

புரவைப் பன்றி வருதிறம் நோக்கின்

கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய"

எனும் பாடலில் பன்றியே பல்லியின் நிமித்தம் கேட்கும் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. பன்றியே நிமித்தம் கேட்கும் என்று சொல்வதிலிருந்து பண்டைய மக்களின் நம்பிக்கையை அறியமுடிகிறது. தொன்றுதொட்டு இன்றுவரை அப்பழக்கமானது நிலவிவந்துள்ளது.

"நல்லிறை மெய்விரல் கூப்பி

இல்லுறை கடவுட்கு ஒக்குதும் பலியே"

என்ற பாடல்வரிகள் இல்லுறை தெய்வத்தை வணங்குவதையும் அதற்கு பலிகொடுப்பதையும் குறிக்கிறது.

## நினைத்ததை நிறைவேற்றும் கடவுள்

நினைத்தது நிறைவேற வேண்டும் என்று மலைக் கடவுளாகிய முருகனை பூவிட்டும் தேன்சொரிந்தும் மனமுருகியும் வழிபட்டதை,

"குன்றக் குறவன் காதல் மடமகள்

மன்ற வேங்கை மலர்சில கொண்டு

மலையுறை கடவுட் குலமுதல் வழுத்தித்

தேம்பலிச் செய்த வீரநறுங் கையள்

மலர்ந்த காந்த ணாறிக

கவிழ்ந்த கண்ணளெம் மணங்கி யோனே"

இப்பாடிலகள் விளக்குகின்றன

## முடிவுரை

மனித மனமானது அலைந்து திரியக்கூடியது. அதனை அடக்கி ஒரு கட்டுக்கோப்பான வழியில் செல்ல வைப்பதே தெய்வ வழிபாடு ஆகும். அவ்வழிபாட்டை ஒரு நிலைப்படுத்தவும், எண்ணங்களைத் தெளிவுப்படுதுதவும் மற்ற உயிர்களிடத்தில் அன்பு செலுத்தவும் கடவுள் வழிபாடு பயன்படுகிறது. கடவுள் வழிபாடு செய்வதால் நம்முடைய மனக்கவலைகள், நோய்கள், பீடைகள் நீங்கி, தொழில் வளமும், செல்வ வளமும் பெருகும் என்பது தமிழர்களின் நம்பிக்கையாகும் சங்க இலக்கிய குறிஞ்சி நில மக்கள் கடவுள்மீது பயமும் பக்தியும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

## References

Duraisami Pillai, A.S. (2001) Pathupattu Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

Duraisami Pillai, A.S. (2002) Aingurunooru Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

Ilampuranar, (2000) Tholkappiyam Porulathikaram Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

Kailaasapadhi, K. (2010) PandaI Tamizhar Vaazhvum Vazhipadum, Kalachuvadu Publications, Nagercoil, India

Venkatasami Nattar, N.M. (2001) Akananuru Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License